# ஐக்கிய நாடுகள் சபையின் பொதுப்பேரவைக் கூட்டத்தின் 72ஆவது அமர்வில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அதிமேதகு எச்.இ.மைத்திரிபால சிறிசேன அவர்களினால் ஆற்றப்பட்ட உரை

**2017 செப்தெம்பர் 19ஆந் திகதி**
**ஐக்கிய நாடுகள், நியூயோர்க்**

**அனைவருக்கும் இனிய மாலை வணக்கம்!**

**பொதுச்சபையின் மாண்புமிகு தலைவர் அவர்களே!**

**ஐக்கிய நாடுகளின் மேன்மைதங்கிய செயலாளர் நாயகம் அவர்களே!**

**மேன்மை மிக்க பேராளர்களே!**

**கௌரவ விருந்தினர்களே!**

**பெண்மணிகளே, கனவான்களே!**

இந்த பொதுப்பேரவைக் கூட்டத்தின் 72ஆவது அமர்வில், விசேடமாக புதிய செயலாளர் நாயகமாகவும், தலைவராகவும் ஒருவர் பதவிப்பிரமாணம் செய்திருக்கும் இச் சந்தர்ப்பத்தில் அவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு, எனது உரையை ஆரம்பிக்கவுள்ளதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையின் தலைவர் என்ற வகையில், மூன்றாவது முறையாகவும் இந்தக் கூட்டத்தில் உரையாற்றவுள்ளதையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த பொதுப்பேரவைக் கூட்டத்தின் 72ஆவது அமர்வின் தொனிப்பொருள், "மக்கள் மீது தீவிர கவனம் செலுத்துதல்: நிலைபேறான உலகில் அனைவருக்கும் சமாதானம் மற்றும் மரியாதைக்குரிய வாழ்வை வழங்க வழிவகுத்தல்" என்பதாக அமைந்துள்ளது. தற்போது உலகில் நிலவுகின்ற பிரச்சனைகளை கவனத்தில் எடுத்துக் கொள்கையில்இ இது காலோசிதமான தொனிப்பொருளாக அமைந்துள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இலங்கையின் சனாதிபதியாக நான் தெரிவு செய்யப்பட்டேன். அவ்வாறு நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர், எனது அன்பிற்குரிய மக்களுக்கு என்னால் ஒருசில உறுதிமொழிகளும், வாக்குறுதிகளும் வழங்கப்பட்டிருந்தன. அந்த உறுதிமொழிகளுள் விசேடமாக, உலகில் வேறெந்த சனநாயக முறைமையுடைய நாட்டுத் தலைவரும் கொண்டிராத அதீத அதிகார பலத்தை இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி கொண்டிருந்ததுடன், நான் சனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அப் பலத்தை இல்லாதொழித்து, பாராளுமன்றத்தின் வசம் ஒப்படைப்பேன் என்பதும் ஒன்றாகும்.

நான் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், அதீத அதிகார பலத்தை சரியான முறையில் பயன்படுத்தியதோடு, அந்த அதிகார பலத்தை பாராளுமன்றம் வசம் ஒப்படைத்தேன். அதீத அதிகார பலத்தை கைவிட்ட அரச தலைவர் என்ற வகையில், எனது நாட்டின் தேசிய அரசியலுக்கும், சர்வதேச அரசியலுக்கும் முன்னுதாரணத்தை வழங்கியுள்ளேன். ஜனநாயகத்தை பாதுகாத்து, ஊக்குவித்து வரும் நாடுகளாக, அதிகாரத்திற்கு வரும் தலைவர்கள் சனநாயகத்தை பாதுகாப்பதற்கும், வலுப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியமையும், அதிகாரத்தை பொறுப்புடன் பயன்படுத்துவதும், நேர்மையான சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்காக ஒருவரின் அதிகாரத்தை பயன்படுத்த வேண்டியமையும் மிக முக்கியமாகும்.

எனினும், கடந்த சில தசாப்தங்களில் இடம்பெற்ற உலக வரலாற்றை கருத்தில் எடுத்துக் கொள்கையில், அதிகாரத்திற்கு வரும் தலைவர்கள் அதிகாரத்தை கைவிடவும், அதிலிருந்து விலகவும் காட்டிய எதிர்ப்பானது, தத்தமது நாட்டினுள் சமாதானத்தை வலுவிழக்கச் செய்திருந்ததுடன், சர்வதேச அளவிலும் நாடுகளுக்கிடையே வெளவேறு பிளவுகளையும், முரண்பாடுகளையும் ஏற்பட வழிவகுத்திருந்தன. வரலாற்றிலிருந்து அத்தகைய அனுபவங்களை நாம் கண்டுள்ளோம்.

எமது நாட்டினுள் சனநாயகத்தை உறுதி செய்து, அதீத பலத்தை வைத்திருந்து தவறான முறையில் அதிகாரத்தை பயன்படுத்திய அரசியல் குழுக்களை வெளியேற்றுவதிலும் நாம் வெற்றியடைந்துள்ளோம். கடந்த இரண்டரை வருடங்களாக, மக்களின் சுதந்திரத்தை நிறுவுதல், மனித உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் அடிப்படை உரிமைகள் ஆகியவற்றை மீள நிலைநாட்டுவதிலுமான எமது பயணத்தில் நாம் வெற்றி கண்டுள்ளோம்.

எமது நாட்டின் அபிவிருத்தியிலான எமது பயணத்தில், 2017 ஆம் ஆண்டு 'வறுமையை தணிக்கும் வருடம்" என்பதாக பெயரிடப்பட்டுள்ளது. எனது நாட்டைப் போன்று, ஒட்டுமொத்த உலக சமூகத்தினரும் இன்று வறுமையை ஒழிக்கும் முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர். 2017 ஆம் ஆண்டு 'வறுமையிலிருந்து விடுதலை' என பெயரிடப்பட்டுள்ள நிலையில், இந்த வருடம் உள்நாட்டு பொருளாதாரத்தை வலுப்படுத்தக்கூடிய வகையில் இலங்கையில் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். இலங்கையில் கடந்த 30 வருடங்களாக இடம்பெற்ற மோதல்கள், எமது பொருளாதாரத்தை பாரதூரமான முறையில் பாதித்ததுடன், எமது பொருளாதாரத்தையும் வலுவிழக்கச் செய்திருந்தமை சர்வதேச சமூகத்தினர் அனைவருமே அறிந்த விடயமாகும். எமது நாட்டினுள் நிலவிய பிரிவினைவாத பயங்கரவாத இயக்கத்தை முறியடித்து, சமாதானத்தை கட்டியெழுப்பி ஜனநாயகத்தை நிறுவியதுடன், சமாதானமானதும், சுதந்திரமானதுமான தேசம் என்ற குறிக்கோளுடன் எமது நாட்டினை முன்னோக்கி நகர்த்திச் செல்வதிலும் நாம் வெற்றி அடைந்துள்ளோம். முரண்பாடுகள் காரணமாக ஏற்பட்ட பொருளாதார பிரதிகூலங்கள் தொடர்பில் நாம் பாடங்களை கற்றுக்கொண்டுள்ளோம். ஆகவே, நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைதல் மற்றும் உள்நாட்டு விவசாயம் மற்றும் கைத்தொழில் உள்ளடங்கலாக உள்நாட்டு பொருளாதாரத்தை வலுப்படுத்துதல் நோக்கி பயணிக்கும் நோக்கில் புதிய அத்தியாயத்தை ஆரம்பித்துள்ளோம்.

நிலையான அபிவிருத்தி இலக்குகளை எய்துவது நோக்கி பயணித்து வரும் எமது அரசாங்கமானது, சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் மிக முக்கியமான விடயத்தை குறிப்பிடல் வேண்டும். அதாவது, எனது சொந்த நாட்டினைப் போன்று ஐக்கிய அமெரிக்கா உள்ளடங்கலாக முழு உலகுமே காலநிலை மாற்றத்தின் பிரதிபலன்களை அனுபவித்து வருவதுடன், சவால்களுக்கும் முகங்கொடுத்து வருகிறது.

இதன் அடிப்படையில், பரிஸ் நகரில் நாம் கைச்சாத்திட்ட சர்வதேச ஒப்பந்தம் மற்றும் செயல்முறைப்படுத்தல் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ள ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு உறுதி செய்ததன் மூலமாக சர்வதேசளவில் நாம் பெற்றுக்கொண்ட ஒற்றுமை அத்தியாவசியமாக அமைந்துள்ளது. இன்றைய உலக சமூகத்தினருக்கு முன்னால் இது மிக முக்கிய இலக்காக காணப்படுவதை நான் வலியுறுத்துகிறேன். மனிதாபிமானம், பசுமை முறைமை மற்றும் உலகின் மக்கள் அனைவரது நலன் கருதியும் இந்த பாரிஸ் ஒப்பந்தத்தின் செயல்முறைப்படுத்தல் தொடர்பான முக்கியத்துவத்தை நாம் உணர்ந்திருப்பது மிகவும் முக்கியமாகும். வறுமை தணிப்பிற்கான தேசிய திட்டத்தின் கீழ், எனது அரசாங்கத்தினால் 'கிராம ஷக்தி'

(கிராமங்களை வலுப்படுத்தல்) எனும் பெயரில் விசேட நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதையொத்ததாக, நாம் 'தொலைநோக்கு 2025' எனும் தெளிவான பொருளாதாரக் கொள்கை மற்றும் 2025 ஆம் ஆண்டு வரையான திட்டத்தையும் அங்குரார்ப்பணம் செய்துள்ளோம். உள்நாட்டு பொருளாதாரம், உள்நாட்டு விவசாயம் ஆகியவற்றை வலுப்படுத்தல் மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றை குறிக்கோளாக கொண்டுள்ள பொருளாதார அபிவிருத்தி திட்டமான 'தொலைநோக்கு 2025' ஆனது புதிய ஆற்றலை ஏற்படுத்தி எமது நாட்டினை வளப்படுத்தும் என நாம் எதிர்பார்த்துள்ளோம்.

**மாண்புமிகு தலைவர் அவர்களே!**

எனது நாட்டிலும், உலகின் ஏனைய நாடுகளிலும் உள்ள குழந்தைகள் பல்வேறு விதமான பிரச்சனைகளையும், சவால்களையும் சந்தித்து வருவதை இந்நேரத்தில் நான் விசேடமாக குறிப்பிட விரும்புகிறேன். குழந்தைகளை பாதுகாக்கும் நோக்கில் எனது நாட்டில் 'குழந்தைகளை பாதுகாத்தல்' எனும் கருப்பொருளின் கீழ் விரிவான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை நாம் முன்னெடுத்துள்ளோம். போதைப்பொருட்கள் மற்றும் பல்வேறு விதமான துஷ்பிரயோகங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாப்பது மிக முக்கியமான விடயமாக உள்ளதுடன், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் நாம் விசேட கவனத்தை செலுத்துவது கட்டாயமானதாகும். தேசிய மற்றும் சர்வதேச அளவில் இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் தெளிவான இலக்குகளை கொண்டிருக்கின்றன.

உலகளவில் தற்போது பெண்களின் உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் பாதுகாப்பதற்கான தேவை நிலவுகிறது. பெரும்பாலான நாடுகளிலும், சமூகங்களிலும் பெண்களுக்கு சம உரிமையை பெற்றுக்கொடுப்பது இன்னமும் மிகப்பெரிய சவாலாகவே காணப்படுகிறது. பெண்களுக்கெதிரான வன்முறைகள் பல சமூகங்களிலும் நடந்தேறி வருவதுடன், அவற்றை அடையாளப்படுத்த வேண்டியது மிக முக்கியமாகும். எனது நாட்டில் 52 சதவீதத்தினர் பெண்கள் ஆவர். எமது அரசிலயமைப்பில் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதனூடாக பெண்களின் உரிமைகளை உறுதி செய்து வருகிறோம். இதற்கிணையாக, தேர்தலின் போது வேட்பாளர் பட்டியலில் 25 சதவீதம் பெண்களின் பங்களிப்பை உறுதி செய்யும் வகையில் புதிய அரசியமைப்பு சீர்திருத்தங்களை எனது அரசு உள்ளடக்கியுள்ளது. குழந்தைகள் மற்றும் பெண்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் போதைபொருள் துஷ்பிரயோகங்களை இல்லாதொழிக்கும் வகையிலான நிகழ்ச்சித்திட்டங்களை நாம் தேசிய மட்டத்தில் ஆரம்பித்துள்ளோம். சட்ட விரோதமான போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் போதைபொருள் துஷ்பிரயோகங்களினால் ஏற்படும் சவால்களை கையாளும் வகையில் சர்வதேச

மற்றும் உலகளாவிய ரீதியிலான திட்டங்களை முன்னெடுப்பதற்கான தேவை குறித்து ஐக்கிய நாடுகள் கவனம் செலுத்தி வருகின்றமை மிக முக்கியமானதாக அமைந்துள்ளது. இதற்கமைய, உலகின் அனைத்து நாடுகளும், அனைத்து சமூகத்தினரும், பாடசாலை சிறுவர்கள் முதற்கொண்டு அனைவருமே மிகப்பெரிய சவாலை ஏற்படுத்தியுள்ள போதைபொருட்களை ஒழிப்பதற்கான தேவையை உணர்ந்திருத்தல் வேண்டும். ஒருமித்த கருத்தின் ஊடாக, சர்வதேச நிகழ்ச்சித் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து கண்டறிய வேண்டியமையும் அத்தியாவசியமாகும்.

அத்துடன் கடந்த மூன்று தசாப்தங்களாக போரினால் பாதிப்படைந்த எனது நாட்டில், 2015ஆம் ஆண்டு நான் சனாதிபதியாக பதவியேற்கும் சந்தர்ப்பத்தில் பிரதானமாக இரு பிரச்சினைகள் நிலவின. அதிகப்படியான வெளிநாட்டு கடனை கொண்டிருந்தமை அதில் மிக முக்கியமான பிரச்சனையாகும். யுத்த காலத்தில் இடம்பெற்றதாக குறிப்பிடப்படும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தினால் கடந்த அரசாங்கம் முகங்கொடுத்த பிரச்சனை மற்றையதாகும். இந்த நிகழ்ச்சித்திட்டம் ஊடாக உள்நாட்டு பொருளாதாரத்தை நாம் வலுப்படுத்தியதுடன், கவர்ச்சிகரமான வெளிநாட்டு முதலீடுகள் ஊடாக கடன் சுமையை குறைக்கும் வகையிலான இலக்கு சார்ந்த மதிப்பீடுகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கரிசனையைப் பெற்றுள்ள விடயங்கள் தொடர்பில் தீர்வுகளை கண்டறிவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் எனது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. கடந்த இரண்டரை ஆண்டுகளாக சனநாயகத்தை ஒன்றிணைத்தல், மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துள்ளதுடன், இந்த காரணிகளை எதிர்காலத்திலும் வலுப்படுத்தும் வகையில் தொடர்ச்சியாக நாம் பணியாற்றவுள்ளோம்.

தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்தல், எனது நாட்டினுள் வெளவேறு மொழி மற்றும் சமயத்தைச் சேர்ந்த மக்கள் அச்சம், சந்தேகம், வெறுப்பு மற்றும குரோதம் இன்றி ஒற்றுமையாக வாழ்வதை உறுதி செய்வதில் எனது அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதை இச் சந்தர்ப்பத்தில் விசேடமாக வலியுறுத்துகின்றேன். சுதந்திரமாகவும், சம உரிமை கொண்ட குடிமக்களாக கண்ணியமாக அனைவரும் வாழும் சமுதாயத்தை கட்டியெழுப்புவதை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம். உள்நாட்டு பொருளாதாரத்தை வலுப்படுத்தல், நம்பிக்கையை உருவாக்கல் மற்றும் மரியாதைக்குரிய சமுதாயத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் ஆகியவற்றின் ஊடாக சிறந்த முறையில் இவ்விலக்கினை

எய்துவது தொடர்பில் எமது அரசாங்கம் உறுதிப்பாட்டுடன் திகழ்கிறது. சட்டம் மற்றும் ஒழுக்கநெறி ஆகியவற்றை ஒன்றிணைப்பதற்கு எனது அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருகிறது.

**மேன்மை தங்கிய தலைவரே,**

சனநாயகம், மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரம் ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கான முன்னேற்றகரமான மதிப்பீடுகளை முன்னெடுத்தல், சர்வதேச சமூகத்துடன் நட்புறவையும், நெருங்கிய உறவுகளையும் பேணல், எமது தேசத்தை கட்டியெழுப்பும் எனது அரசாங்கத்தின் பணியை வெற்றி பெறச்செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்பினை பெற எதிர்பார்த்துள்ளதை தற்சமயம் நான் வலியுறுத்துகின்றேன்.

இலங்கையானது 62 ஆண்டுகளாக ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினராகவுள்ளது. ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடு என்ற ரீதியில், அதன் உரிமை, மாநாடுகள் மற்றும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன், அனைத்து நேரங்களிலும் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களுக்கு இணக்கமாகவும் நாம் செயற்பட்டு வருகிறோம்.

இதன் காரணமாக, எனது நாட்டின் சுதந்திரம் மற்றும் இறைமையை பாதுகாப்பதுடன், குற்றச்சாட்டுகளை அடையாளம் கண்டு அதற்குரிய தீர்வுகளை செயல்முறைப்படுத்தி வரும் இவ்வேளையில், அனைவரதும் ஒத்துழைப்பை பெற நாம் எதிர்பார்த்துள்ளோம். ஒருசிலர் துரிதமான பயணத்தையும், குறுகிய கால தீர்வுகளையும் எதிர்பார்க்கின்றனர்.

30 வருடம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடு என்ற ரீதியில், அச்சம், சந்தேகம், கோபம் மற்றும் வெறுப்பு ஆகியவற்றை இல்லாதொழித்து மக்களை ஒன்றிணைத்தல், எனது நாட்டு மக்களை முன்னோக்கி நகர்த்துதல் மற்றும் எனது தாய்நாட்டினை சக்திமிக்க தேசமாக மீள கட்டியெழுப்பி வரும் எமது பயணத்தின் வெற்றியை உறுதிப்படுத்தி, அனைவரும் ஒத்துழைப்பை வழங்குமாறு நான் கேட்டுகொள்கிறேன். இதன் காரணமாகவே நாம் தேடிச்செல்லும் வெற்றிகரமான பயணத்திற்கு உங்கள் ஆதரவினை வழங்குமாறு வேண்டி நிற்கின்றேன்.

எனது நாட்டில் மோதல்கள் மீள நிகழாததை உறுதி செய்தல், எனது நாட்டில் அனைத்து சமூகத்தினர் மத்தியிலும் ஒற்றுமை மற்றும் நட்புறவை ஏற்படுத்துதல், வெவ்வேறு சமயத்தினர் மற்றும் வெவ்வேறு மொழிகளை பேசும் அனைவர் மத்தியிலும் சகோதரத்துவத்தை ஏற்படுத்தும் எமது பயணத்திற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பையும் மற்றும் சர்வதேச சமூகத்தையும் ஒத்துழைப்பு வழங்குமாறு மீண்டும் ஒருமுறை வேண்டி நிற்கின்றேன். நல்லிணக்க முயற்சிகள் வெற்றி பெற அவசியமான நடவடிக்கைகள், முரண்பாடுகள் மீள நிகழாமலிருப்பதை உறுதி

செய்தல், எம்மைப் போன்று யுத்தத்திலிருந்து மீண்டெழுந்து வரும் ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக ஜனநாயகமும், இறைமையும் கொண்ட தேசத்தை கட்டியெழுப்பும் எமது நோக்கம் உள்ளிட்ட அபிவிருத்தி முயற்சிகளுக்கும் உங்கள் ஒத்துழைப்பை நான் எதிர்பார்த்துள்ளேன்.

கௌரவ தலைவர் அவர்களுக்கும், செயலாளர் நாயகம் அவர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களை கூறி எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி!